**செய்தி வெளியீடு எண்: 633** **நாள்: 08.09.2018**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் நடப்பு காரீப் கொள்முதல் பருவம் **2017–18**ல், **31.8.2018** முடிய மட்டுமே நெல் கொள்முதல் செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியிருந்தது.

டெல்டா மாவட்ட வேளாண் பெருமக்களின் நலனை கருத்தில் கொண்டு, ரூபாய் **115.67** கோடி மதிப்பிலான சிறப்பு குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தியதின் பயனாக, டெல்டா மாவட்டங்களிலிருந்து தொடர்ந்து நெல் அறுவடை செய்யப்பட்டு அனுப்பப்பட்டு வரும் நிலையில், **1.9.2018**க்கு பிறகும் நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டு விவசாயிகளின் கோரிக்கைகளையும், நலனையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இது சம்பந்தமாக மாண்புமிகு பாரதப்பிரதமர் மற்றும் மாண்புமிகு மத்திய நுகர்வோர், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு. ராம் விலாஸ் பாஸ்வான் அவர்களுக்கு கடிதம் அனுப்பினார்கள். மேலும், மத்திய அரசு நல்ல முடிவினை எடுக்க அறிவுறுத்தும் பொருட்டு, மாண்புமிகு மத்திய நுகர்வோர், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு. ராம் விலாஸ் பாஸ்வான் அவர்களை புதுடில்லி சென்று, நேரில் சந்தித்து, தமிழ்நாடு விவசாயிகளின் கோரிக்கையினை அவரிடம் எடுத்துரைக்க, மாண்புமிகு தமிழ்நாடு உணவுத்துறை அமைச்சர் திரு. காமராஜ் அவர்களையும், உணவுத்துறை செயலாளர் திரு. தயானந்த் கடாரியா, இ.ஆ.ப. அவர்களையும் பணித்தார்கள்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்ற மத்திய அரசு, 30.9.2018 வரை நெல் நேரடி கொள்முதல் நிலையங்கள் செயல்பட கால நீட்டிப்பு செய்து ஆணைகள் பிறப்பித்தது. இதன் மூலம் நேரடி கொள்முதல் நிலையங்கள் தொடர்ந்து 30.9.2018 வரை செயல்படும்.**

தமிழ்நாடு விவசாயிகள், நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் தங்களது நெல்லை விற்பனை செய்து பயன் பெறவேண்டும் என தமிழ்நாடு அரசு கேட்டுக்கொள்கிறது.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**